கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 170/2022

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 ஆண்டியப்பன் திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 25.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கின் வழக்கு எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் படிக்கவில்லை. என்ன பரிகாரம் கோரி அசல் வழக்கு 20/2023 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் மின் இணைப்பு வேண்டி தாக்கல் செய்துள்ளேன். எனது முதல் அண்ணன் பெயர் பொன்னன், 2 வது அண்ணன் பெயர் சுப்பிரமணி, 3 வது அண்ணன் சண்முகம் ஆகும். எனது அண்ணன் பொன்னன் உயிருடன் இல்லை. அவருக்கு வாரிசுகள் உள்ளனர். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.20/2023 ல் பொன்னனின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது அண்ணன் சுப்பிரமணி தற்போது உயிருடன் இல்லை.

2. அவருக்கும் ஒரு மகன், 2 மகள்கள் உள்ளனர். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.20/2023 ல் சுப்பிரமணியின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் பூமிதான இயக்கத்தில் எனது தந்தைக்கு வழுங்கப்பட்ட சொத்தாகும். எனது தந்தைக்கு தான் தாவா சொத்தை பூமிதான இயக்கத்தில் கொடுத்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் நியாபகம் இல்லை. என்ன காரணத்திற்காக பூமிதான இயக்கத்தில் எனது தந்தைக்கு நிலம் கொடுத்தார்கள் என்றால் நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுத்தார்கள். எந்த வருடம் எனது தந்தைக்கு நிலம் கொடுத்தார்கள் என்றால் சுமார் 60 வருடங்களுக்கு மேல் இருக்கும்.

3. எனது தந்தைக்கு எவ்வளவு விஸ்திரனம் அளவுள்ள நிலம் கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். எனது தந்தை தாவா சொத்தில் கிணறு எதுவும் வெட்டினாரா என்றால் இல்லை. தாவா சொத்தில் உள்ள கிணறு யார் வெட்டியது என்றால் நானும், எனது சகோதரர்களும் சேர்ந்து கிணறு வெட்டினோம். எந்த வருடம் கிணறு வெட்டப்பட்டது என்றால் சுமார் 20 வருடங்கள் இருக்கும். மேற்படி கிணறு

வெட்ட அரசாங்கம் யார் பெயரில் உத்தரவு வழுங்கப்பட்டது என்றால் எனது அண்ணன் பெருமாள் பெயரில் வழுங்கப்பட்டது. மேற்படி உத்தரவின் இரசீதை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. மேற்படி கிணறு மற்றும் அதற்கான மின் இணைப்பு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் ஒரே சர்வே எண்ணில் தான் உள்ளது. சர்வே எண் நியாபகம் இல்லை. மேற்படி கிணற்றிற்கான மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் பெருமாள் என்கிற பொன்னன், சுப்பிரமணி மற்றும் சண்முகம் ஆகியோர் பெயரில் உள்ளது. மேற்படி கிணறு மற்றும் மின் இணைப்பில் எனக்கு பங்கு உள்ளதா என்றால் உள்ளது. எவ்வளவு பங்கு எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் 4ல் 1 பங்கு ஒதுக்கப்பட்டது. தாவா சொத்தின் மொத்தம் விஸ்தீரனம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.20/2023 பற்றி தெரியுமா என்றால் தெரியும். மேற்படி மின் இணைப்பில் எனது பெயரில் உள்ளதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. மின் வாரியத்தில் ஒரு நபரின் பெயரில் மட்டுமே மின் இணைப்பு வழுங்க முடியும் என்பதால் எனது பெயரில் இல்லை. எனக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் வடபுறம் யாருடைய நிலம் என்றால் வடக்கே மற்றும் கிழக்கே இன்ப சேவா சங்கத்தின் நிலம் உள்ளது. மேற்கே மலை உள்ளது. தென்புறம் மதுரை வீரன் என்பவரது நிலம் உள்ளது. எனக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் அனுபவம் எத்தனை வருடங்களாக என்னிடம் உள்ளது என்றால் மேற்படி நிலம் எனக்கு பிரித்து கொடுக்கப்பட்ட நாளிலிருந்து சுமார் 20 வருடங்களாக இருக்கம். மேற்படி 20 வருடங்கள் எனது அனுபவத்தில் இருந்ததற்கு அடங்கல் மற்றும் இதர வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. நீதிமன்றதிலிருந்து தாவா சொத்தை பார்வையிட வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

6. நான் நீதிமன்ற ஆணையர் வந்த சமயத்தில் அங்கு இல்லை. எனது மகன் தான் சொன்னார். நீதிமன்ற ஆணையர் வருவதாக எனது வழக்கறிஞர் என்னிடம் தகவல் தெரிவித்தாரா என்றால் இல்லை. ஆனால் எனது மகன் இருந்தார். பூமிதான இயக்கத்தில் எனது தந்தைக்கு நிலம் வழுங்கப்பட்ட பின்பு எனது தம்பி சண்முகம் பெயரில் ஜீவேந்திர என்ற திட்டத்தின் கீழ் அவரால் சுயமாக தாவா வொத்தில் கிணறு வெட்டப்பட்டு அவருக்கு அதன் மின் இணைப்பு வழுங்கப்பட்டுள்ளதால் அவருக்கு சொந்தமானது என்றால் சரியல்ல.

மேற்படி விவரங்களை நிரூபணம் செய்ய சண்முகம் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சுப்பிரமணி மற்றும் பொன்னன் ஆகியோருககும் தாவா சொத்தில் உள்ள கிணறு மற்றும் மின் இணைப்பு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல.

7. மேற்படி இருவருக்கும் தனியாக மின் இணைப்பு உள்ளதாக என்று எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மேற்படி கிணறு மற்றும் மின் இணைப்பானது எங்கள் நால்வருக்கும் பொதுவாக பாத்தியப்பட்டதாகும். அவ்வாறு நால்வருக்கும் மேற்படி கிணறு மற்றும் மின் இணைப்பானது பொதுவாக பாத்தியப்பட்டிருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது பெயரில் எந்த நிலமும் இல்லை என்றால் சரியல்ல. எனது பெயரில் நிலம் இருந்திருந்தால் நான் 20 வருடங்களாக அனுபவம் செய்து வந்ததாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

8. நானாகவே பாகப்பிரிவினை ஆவணம் என்று 2013 ல் தயார் செய்து பதிவு செய்யாமல் வாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டு மேற்படி ஆவணத்தை பி.சா.ஆ.1 ஆக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால சரியல்ல. எனவே வாதிக்கு பாத்தியப்பட்ட கிணறு மற்றும் மின் இணைப்பானது என்னை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றும், அதனால் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி கிணறு மற்றும் மின் இணைப்பில் வாதியின் அனுபவத்தை நான் இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கிணறு மற்றும் மின் இணைப்பும் பாத்தியம் கோர எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

9. எனக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.20/2023 யை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்களும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்தி அதன் அடிப்படையில் வாதியின் உரிமையை அபகரிக்க வேண்டி மேற்படி அசல் வழக்கு எண்.20/2023 யை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது உண்மையாக

இருந்திருந்தால் இறந்து போன பொன்னன், சுப்பிரமணியின் வாரிசுகளையும் எனது வழக்கில் தரப்பினர்களாக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல.

10. அசல் வழக்கு எண்.170/2022 வழக்கு வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றும், நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.20/2023 வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.
குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**